


# “முற்போக்குச் சிந்தனைகளை முன்னெடுக்கும் இயக்கம்!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் பத்தாவது அமர்வுக்குத் தலைமை வகித்து, கழகக் கல்வியாளர் அணியின் தலைவர் ந.செந்தலை கவுதமன் அவர்கள் ஆற்றிய உரை:**

“இந்த இரண்டு நாள் பெருவிழாவிற்கு வைக்கப்பட்டிருக்கும் பெயர் ‘அறிவுத் திருவிழா’. திராவிட முன்னேற்றக் கழகம் வெறும் அரசியல் இயக்கம் மட்டுமல்ல, இது அறிவு இயக்கம். அதன் அடையாளமாகத்தான் அண்ணா அவர்கள் 1950-இல் கோவை மாநகரிலே இதுபோன்று ஓர் அறிவுத் திருவிழாவை நடத்தினார். அதுதான் முத்தமிழ் விழா, இரண்டு நாள் விழா. அந்த முத்தமிழ் விழாதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்கு ஒரு திருப்புமுனையைத் தந்தது.

## அறிவுத் திருவிழாவின் முன்னோடி

அதேபோன்ற விழா அடுத்து மதுரையிலும் நடந்தது. காஞ்சி மாநகரிலே கலைத் திருவிழா என்ற பெயரிலேயே அறிஞர் அண்ணா பொறுப்பேற்று நடத்தினார். ஆசிய கண்டத்தின் மிகப் பெரிய நூலகம் அண்ணா நூற்றாண்டு நூலகம். அந்தப் பணியைச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதன் தொடர்ச்சியாக நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞரின் நூற்றாண்டையொட்டி உருவாக்கியிருப்பதுதான் மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகம். இவர்களை எல்லாம் உருவாக்கிய தந்தை பெரியார் பெயரில், கோவை மாநகரில் தந்தை பெரியார் நூற்றாண்டு நூலகம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இப்படி அறிவுக்கு ஒரு தொடர்ச்சியைத் தந்துகொண்டிருக்கும் இந்த அறிவுத் திருவிழா வள்ளுவர் கோட்டத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

## கம்யூனிசம்

நம் முதலமைச்சர் அவர்களுக்கு வைக்கப்பட்ட பெயர், முத்தமிழறிஞர் கலைஞர் நினைத்திருந்த பெயர் அய்யாத்துரை என்பது. தந்தை பெரியாரின் நினைவாக அய்யா, அண்ணாவின் நினைவாக துரை - இரண்டையும் இணைத்து அய்யாத்துரை என்று பெயராக வைக்க நினைத்திருந்தார். ஆனால், குழந்தை பிறந்து நான்கு நாளிலே ரஷ்ய நாட்டின் புரட்சித் தலைவர் ஜோசப் ஸ்டாலின் மறைந்தார். உடனே நம் முத்தமிழறிஞர் கலைஞர், தன் மகனுக்கு ஸ்டாலின் என்று பெயர் வைப்பதாக அறிவித்தார், அப்படி வந்த பெயர்தான் ஸ்டாலின்.

மார்க்சியத்தின் அடையாளமாக இருக்கின்ற பெயர் ஸ்டாலின். அதேபோல் அம்பேத்கர். ‘உங்களுடைய உரையை அனுமதிக்க முடியாது’ என்று அவர் பிறந்த மகாராஷ்டிரத்திலே அறிவித்த பொழுது, ‘எந்த உரையை மறுத்தார்களோ அந்த உரையை எனக்கு அனுப்பி வையுங்கள்’ என்று கேட்டவர் தந்தை பெரியார். அனுப்பிய அந்த உரையை மொழிபெயர்த்து, வெளியிட்டவர் தந்தை பெரியார். அதுதான் ‘சாதியை ஒழிக்க வழி’ என்னும் நூலாக வெளியானது. அந்த அம்பேத்கருக்கு அவர் பிறந்த மகாராஷ்டிரத்தில், கல்லூரிக்குப் பெயர் வைக்க முடியவில்லை. ஆனால், அம்பேத்கர் பெயரில் கல்லூரிக்குப் பெயர் வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அம்பேத்கர் பெயரிலே ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கியவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

## அம்பேத்கரியம்

நம்முடைய கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்கள். பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்தபொழுது, முதலமைச்சர் கலைஞரிடத்தில் ‘அமைச்சர்களாகிய நாங்களே பெரிய பெரிய வீட்டில் இருக்கிறோம். நீங்கள் முதலமைச்சர், ஆனால், கோபாலபுரத்தில் சிறிய வீட்டிலே இருக்கிறீர்களே, அதனாலே ஒரு பெரிய வீட்டை உருவாக்குகிறோம்’ என்று சொன்னார். முதலில் மறுத்தாலும், கடைசியில் துரைமுருகன் வேண்டுகோளை ஒப்புக்கொண்டார் கலைஞர். வீடு உருவாக்கப்பட்டது. அதுதான் பூம்பொழில்.

வீட்டை விரிவுபடுத்தி உருவாக்கிய பிறகு, கலைஞரிடத்தில் சென்று கேட்டார்கள், ‘ஒரு முறை நீங்கள் வந்து இந்த வீட்டைப் பார்த்து விடுங்கள். இந்த வீடு உங்களுக்குப் பொருத்தமானதாக இருக்கிறதா? ஏதேனும் விரிவுபடுத்த வேண்டுமா?’

**ந.செந்தலை கவுதமன்**
**தலைவர்,**
**கழகக் கல்வியாளர் அணி**



என்று கேட்டபொழுது கலைஞர் வந்தார். அவருக்காக விரிவுபடுத்தப்பட்ட வீட்டைப் பார்த்தார். பார்த்த உடனே கலைஞர் சொன்னார், ‘அம்பேத்கர் பெயரிலே கல்லூரி வைத்தது யார்? நாம்தானே! அம்பேத்கர் பெயரிலே பல்கலைக்கழகம் அமைத்தவர் யார்? நாம்தானே! அந்தப் பல்கலைக்கழகத்திற்கு இடமில்லாமல் தவிக்கிறார்கள். இந்த வீட்டைப் பல்கலைக்கழக அலுவலகத்திற்குக் கொடுத்து விடுங்கள்’ என்றார்.

தனக்கு உருவாக்கப்பட்ட வீட்டை அம்பேத்கர் பல்கலைக்கழகத்திற்கு வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர். இப்படி மார்க்சியம், அம்பேத்கரியம் இரண்டையும் இணைத்த பெரியாரியம் மூன்றுக்குமான புத்தகக் கண்காட்சியை இங்கே ஒன்பது நாள்களாக நடத்துகிறார்கள்.

## திராவிட அடையாளம்

மார்க்சியம், அம்பேத்கரியத்தைப் போல் முற்போக்கான திராவிடம் என்ற ஓர் அடையாளத்தை பெரியார் இயக்கம் உருவாக்கி காட்டியதால்தான் சாதிச் சண்டை இங்கே ஒழிந்தது. மதப் பூசல் இங்கே ஒழிந்தது. மதங்களைக் கடந்து, சாதிகளைக் கடந்து பூசலிட்டுக் கொண்டிருந்த அந்தச் சூழலைக் கடந்து, பார்ப்பனர் அல்லாதார் என்ற அடையாளத்தின் கீழ், திராவிடர் என்ற அடையாளத்தின் கீழ் ஒன்று திரண்டோம். அதனால்தான் இந்தியாவிலேயே நாம் இன்றைக்கு உயர்ந்து நிற்கிறோம்.

உலகம் முழுவதும் இரண்டே பிரிவுதான். படித்தவர்கள், படிக்காதவர்கள். இந்தியாவில் மட்டும்தான் இன்னொரு பிரிவு இருந்தது. அது ‘படிப்பு மறுக்கப்பட்டவர்கள்’ என்னும் பிரிவு. படிப்பு மறுக்கப்பட்டவர்களுக்கு அவரவர் சாதி எண்ணிக்கைக்கு ஏற்ற வண்ணம், படிப்பில் இடம் கொடு, பதவியில் இடம் கொடு என்று பெற்றுக் கொடுத்த இயக்கம், திராவிடர் இயக்கம். அதனால் வந்த வாழ்வுதான் இந்த வாழ்வு.

இன்றைக்கு ‘ஆரியமாயை’ படிக்க முடியும், ‘திராவிடர் நிலை’ படிக்க முடியும், ‘காந்தியார் சாந்தியடைய’ படிக்க முடியும், ‘பெரியாரின் பொன்மொழிகள்’ படிக்க முடியும். ஒருகாலத்தில் தடை செய்யப்பட்ட நம் புத்தகங்களையெல்லாம் இப்போது படிக்க முடியும். எத்தனை பேர் படிக்கிறோம் என்ற கேள்வியை எழுப்புவதற்குத்தான் இந்த அறிவுத் திருவிழா. கண்காட்சிக்குச் செல்லுங்கள், உங்கள் வீட்டுக்குப் போகும்போது கையிலே புத்தகங்களோடு செல்லுங்கள்.

## உதயநிதியின் பணிவு

தமிழ்மண் பதிப்பகம் சார்பில் ‘அண்ணா அறிவுக்கொடை’ என்ற தொகுப்புநூல்கள் வெளியிடப்பட்டன. அந்த நூல்களுக்கான இணையவழி விற்பனை அறிமுகப்படுத்துகின்ற விழா, சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடல், புத்தகக் கண்காட்சியில் நடந்தது. அப்பொழுது நான்தான் அந்த விழாவின் தலைவர். அந்த விழாவில் உரையாற்ற வந்த உதயநிதி அவர்கள் தி.மு.க.வின் இளைஞர் அணிச் செயலாளர். அப்போது அந்த விழாவுக்குத் தலைமை தாங்கிய என்னிடம் ‘மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் அவர்களையும் மேடையில் அமர வைக்கலாமா?’ என்று கேட்டார். அவர் நினைத்திருந்தால், ‘அண்ணா வாங்க, உட்காருங்கள்’ என்று மா.சுப்பிரமணியனிடம் உரிமையுடன் சொல்லியிருக்கலாம். ஆனால், என்னிடத்தில் அனுமதி கேட்கிறார். ‘தாராளமாய் உட்கார வையுங்கள்’ என்றேன் நான்.

இன்னும் இரண்டு மாதத்தில் முதலமைச்சர் ஆகப் போகிற ஒருவருக்கான பிறந்தநாள். அந்தப் பிறந்தநாளுக்காக ஒரு புத்தகம் வெளியிடுகிறார்கள். அந்தப் புத்தகத்தைக் காட்டி இந்தப் புத்தகத்தை இந்த மேடையில் வெளியிட, நீங்கள் அனுமதிப்பீர்களா? என்று கேட்டார். எனக்கு ஒவ்வொன்றுமே வியப்பு. இப்படி ஓர் எளிமை, இப்படி ஒரு பணிவு, இப்படி ஓர் அமைதி படிந்த சொற்கள். எந்த ஒன்றையுமே அனுமதி கேட்டு செயல்படுத்துகின்ற ஒரு உயரிய பண்பு. இப்படி ஒருவரை நான் எதிர்பார்க்கவே இல்லை, வியந்துபோனேன்.

ஒலிபெருக்கிக்கு முன்னால் வந்தவுடன் என்னையும் அறியாமல், ‘எங்கள் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களே’ என்றேன். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னேன். ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் சொன்னேன். அமைச்சராவதற்கு முன்னால் சொன்னேன். சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கு முன்னால் சொன்னேன். மேலும் ‘1957-இல் திருச்சிராப்பள்ளி மாநாட்டிலே நாவலர் அவர்களை அறிஞர் அண்ணா எப்படி அழைத்தாரோ அப்படி உங்களை அழைக்கிறோம்’ என்று சொன்னேன். ‘தம்பி வா, தலைமை தாங்க வா. உன் ஆணைக்கு கட்டுப்பட்டு நடக்க நாங்கள் காத்திருக்கிறோம்’ என்றேன். அந்த உணர்ச்சி இப்பொழுது கூடியிருக்கிறது.

அந்தச் சொல்லுக்கும், அந்த வாசகங்களுக்கும், சொன்ன சொற்களுக்கும் மேம்பட்ட நிலையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் நம்முடைய இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள். அவருடைய வழிகாட்டுதலின்படி, திராவிடம் செழிக்க இளைஞர் அணி தோழர்கள் பாடுபட வேண்டும்.”

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத் திருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘முற்போக்கு புத்தகக்காட்சி’யில் ஒவ்வொரு பதிப்பகத்திலும் அதிகம் விற்பனையான நூல்கள் :**




உயிர்மை பதிப்பகம் :
**திராவிடத்தால் வாழ்ந்தோம்**

அருவி புத்தக உலகம் :
**செயலும் செயல்திறனும்**

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் :
**அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள்**

எதிர் வெளியீடு :
**சாதிப்பெருமை**